**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்**

**ந. க. எண் 4741/2023/கே8**

| | | |
|---|---|---|
| ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் நாள் | – | 25.11.2025 |
| ஏலம் நேரம் | – | மாலை 3.00 மணிக்கு |
| ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நேரம் | – | மாலை 3.30 மணிக்கு |
| ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் இடம் | – | தலைமைப் பொறியாளர் அறை, பிரதான அலுவலகம், கோயம்புத்தூர் மாநகராட்சி |
| டேவணித் தொகையாக | – | ரூ.10,000/- |
| | – | ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி என்ற பெயரில் டேவணித் தொகையினை வரைவோலையாக செலுத்த வேண்டும். வரைவோலை சமர்ப்பிக்கப்படாத படிவங்கள் நிரகாரிக்கப்படும். |

கோயம்புத்தூர் மாநகராட்சி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்ட பழைய பொருட்களை தற்போது எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் ஏலம் செய்ய 25/11/2025 அன்று ஆணையாளர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலரால் பொது ஏலத்தில் விடப்படும். இதற்கு ஒப்பந்தப்புள்ளியும் பொறியியல் பிரிவில் 25/11 /2025 தேதி மாலை 3.00 மணி வரை பொறியியல் பிரிவில் அதற்கென உள்ள பெட்டியில் செலுத்தவும் 25/11 / 2025 தேதி அன்று எலம் முடிந்தவுடன் தொகையும், ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச தொகை கோரியவரின் தொகையை கணக்கில் எடுத்துக் கொண்டு இதில் யாருடையது உயர்ந்தபட்ச தொகையோ அதனை ஏற்றுக் கொண்டு பொருட்கள் வழங்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஏல வைப்புத் தொகையாக ரூ.10,000/- செலுத்திய பின்னரே ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்படுவர். இதே போல் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக ரூ.10,000/ செலுத்தியதற்கான வங்கி வரைவோலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும், அல்லது மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய விபரத்துடன்

ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டு பரிசீலனையில் ஏற்றுக் கொள்ளப்படாது. தேர்வு செய்யாத ஒப்பந்தப்புள்ளிகளுக்கு உரிய வைப்புத் தொகை வேலை உத்தரவு வழங்கப்பட்ட பின் திரும்ப வழங்கப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகளில் உள்ள பயனற்ற பாத்திரங்கள் இரும்பு, பித்தளை, சில்வர், அலுமினியம் (Vessels) என தனித்தனியே பிரிக்கப்பட்டு அதற்கான விலை கிரயம் கோரப்படும். தற்போது பொருட்கள் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் ஒப்பந்தப்புள்ளி விடப்படும். மேலும் ஒப்படைக்கும் பொழுது எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் தான் ஒப்படைக்கப்படும்.

கூடுதலாக பொருட்கள் இருப்பின் அப்பொழுது அதற்கேற்ப ஒப்பந்தப்புள்ளி நடத்தும் அதிகாரிகளால் குறிப்பிடும் தொகையை முன் பணமாக அலுவலகத்தில் செலுத்திய பிறகே மீதமுள்ள பொருட்கள் வழங்கப்படும்

ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச கோருபவரின் உயர்ந்தபட்ச தொகை ஒப்புக்கொள்ளப்பட்டு மாநகராட்சியால் எடுத்துக் கொள்ள உத்தரவு கிடைக்கப்பட்ட 7 நாட்களுக்குள் மாநகராட்சியால் தெரிவிக்கப்படும் தொகையினை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டும்

| **Demand Draft Details** | |
|---|---|
| Name | The Commissioner, Coimbatore City Municipal Corporation |
| Amount | Mentioned in work Order |

மேற்காண் கணக்கு தலைப்புகளில் செலுத்தி பொருட்களை 15 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்ய தவறினால் அவர்கள் செலுத்திய வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்பட்டு மறுஒப்பந்தப்புள்ளி கோரி விற்பனை செய்யப்படும். இதனால் மாநகராட்சிக்கு ஏதாவது இழப்பு ஏற்படுமாயின் அதனை சம்பந்தப்பட்டவரிடமிருந்து வசூலிக்க சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த ஒப்பந்தப்புள்ளி குறித்து மாநகராட்சியால் கூடுதலாக விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் ஒப்பந்ததாரர்கள் கட்டுப்பட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள தொகையை எந்த வித காரணமும் காட்டாமல் அங்கீரிக்கவோ அல்லது ரத்து செய்யவோ மாநகராட்சிக்கு அதிகாரம் உண்டு. கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணையதளத்தில் வழங்கப்பட்ட விலைப்பட்டியலில் விலைப்புள்ளியினை தெளிவாக எழுத வேண்டும். திருத்தம் இருந்தால் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொள்பவர்கள் வைப்புத் தொகை செலுத்தியதற்கான இரசீது மற்றும் விலைப்பட்டியல் இணைத்து ஒப்பந்தப்புள்ளி உறையினை சீல் செய்து ஒப்பந்தப்புள்ளி

பெட்டியில் 25/11/ 2025 அன்று மாலை 3.00 மணியளவில் இட வேண்டும். ஒப்பந்தப்புள்ளியானது 25/11 /2025 அன்று 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளி உறையானது திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளியில் நடக்கும் காலத்திலும் அல்லது அதற்கு பிறகோ எந்த நிலையிலும் இந்த அறிக்கையில் கண்ட எந்த நிபந்தனைகளையும் தளர்த்தவோ, மாற்றவோ, நீக்கவோ அல்லது புதியதாக சேர்க்கவோ ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. எதிர்பாராதவிதமாக ஏலம் நடத்த குறிப்பிட்ட தேதி ஏலம் நடத்த முடியாமல் போனால் ஆணையாளர் குறிப்பிடுகின்ற மற்ற தேதியில் நடத்தப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எந்த விதிகளின் படியாவது நடக்க தவறினாலோ அல்லது மீறி நடந்தாலோ செலுத்திய வைப்புத் தொகையை பறிமுதல் செய்வதுடன் இதனால் மாநகராட்சிக்கு ஏற்படும் இழப்பை சரிகட்ட சட்டபடி மேல் நடவடிக்கை எடுக்க ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

ஒப்பந்தப்புள்ளியில் வைப்புத் தொகை ரூ.10,000/-ஐ பொருட்கள் முழுவதும் அப்புறப்படுத்திய பிறகு மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான மற்றப் பொருட்கள் ஏதும் தவறுதலாக எடுத்துச் செல்லவில்லை என்று பொது பண்டக காப்பாளரின் குறிப்பு பெற்ற பின்பே திருப்பி கொடுக்கப்படும். ஒப்பந்தப்புள்ளியினை குறித்து மாநகராட்சியால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது ஆகும்.

(ஒம்)/--
ஆணையாளர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

## பொருட்களின் விபரம்

| வ.எண். | உபயோகமற்ற தளவாடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | டிரம் முடியுடன் (அலுமினிய பொருட்கள்) | 19 |
| 2. | அன்ன கரண்டி (அலுமினிய பொருட்கள்) | 57 |
| 3. | குழம்பு கரண்டி (அலுமினிய பொருட்கள்) | 338 |
| 4. | டம்ளர் (அலுமினிய பொருட்கள்) | 2033 |
| 5. | தட்டு (அலுமினிய பொருட்கள்) | 1982 |
| 6. | சின்னக் குண்டா (அலுமினிய பொருட்கள் | 22 |
| 7. | முடியுடன் பெரிய அண்டா (அலுமினிய பொருட்கள் | 5 |
| 8. | பெரிய முடியில்லாத குண்டா (அலுமினிய பொருட்கள்) | 49 |
| 9. | சின்ன முடியில்லாத குண்டா (அலுமினிய பொருட்கள் | 41 |
| 10. | முடியுடன் அண்டா(அலுமினிய பொருட்கள்) | 12 |
| 11. | அலுமனிய முடி(அலுமினிய பொருட்கள்) | 5 |
| 12. | சக்கு (அலுமினிய பொருட்கள்) | 9 |
| 13. | குடம் (அலுமினிய பொருட்கள்) | 6 |
| 14. | வடசட்டி (அலுமினிய பொருட்கள்) | 6 |
| 15. | தோசை கரண்டி(அலுமினிய பொருட்கள்) | 2 |
| 16. | அன்ன கூடை (அலுமினிய பொருட்கள்) | 27 |
| 17. | தண்ணீர்டிரம் (அலுமினிய பொருட்கள்) | 4 |
| 18. | பேஷன் (அலுமினிய பொருட்கள்) | 32 |
| 19. | அண்டா (அலுமினிய பொருட்கள்) | 9 |
| 20. | தண்ணீர்ஜக்கு ( அலுமினிய பொருட்கள்) | 4 |
| 21. | ஒட்டை கரண்டி(அலுமினிய பொருட்கள் | 9 |
| 22. | அருவா மனை (அலுமினிய பொருட்கள்) | 7 |
| 23. | முடி குண்டா (அலுமினிய பொருட்கள்) | 10 |
| 24. | பக்கெட்(அலுமினிய பொருட்கள்) | 3 |
| 25. | அண்டா (பித்தளை பொருட்கள்) | 22 |
| 26. | உருளை, உருளி (பித்தளை பொருட்கள்) | 8 |
| 27. | டிரம் (பித்தளை பொருட்கள்) | 4 |
| 28. | தோசை கரண்டி (பித்தளை பொருட்கள்) | 2 |

| | | |
|---|---|---|
| 29. | முடியுடன் தண்ணீர் டிரம் (பித்தளை பொருட்கள்) | 3 |
| 30. | பக்கெட் (பித்தளை பொருட்கள்) | 9 |
| 31. | அன்ன கரண்டி (பித்தளை பொருட்கள்) | 1 |
| 32. | செம்பு (பித்தளை பொருட்கள்) | 4 |
| 33. | சின்ன அண்டா பித்தனை பொருட்கள்) | 5 |
| 34. | தாம்பாளத் தட்டுலித்தலை பொருட்கள் | 7 |
| 35. | பெரிய அண்டா (பித்தளை பொருட்கள்) | 1 |
| 36. | குடம் (பித்தளை பொருட்கள்) | 3 |
| 37. | பக்கெட்(பித்தளை பொருட்கள்) | 4 |
| 38. | இரும்பு பக்கெட் (பெரியது. சிறியது) | 18 |
| 39. | இரும்பு வடசட்டி (பெரியது.சிறியது) | 11 |
| 40. | இரும்பு சட்டுவம் (பெரியது. சிறியது) | 3 |
| 41. | ஆயில் டின் | 15 |
| 42. | முறம் (இரும்பு) | 2 |
| 43. | அரிவாள் மனை | 3 |
| | **மொத்தம்** | **4810** |

| **வ.எண்.** | **அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உபயோகமற்ற தளவாடங்கள் மொத்த விபரம்** | **மொத்த எடை** |
|---|---|---|
| 1 | பித்தளை | 769.23 |
| 2 | துருப்பிடிக்காத எஃகு | 1494.57 |
| 3 | அலுமினியம் | 3005.54 |
| 4 | இரும்பு | 1054.99 |

# விலைப்புள்ளி படிவம்

## கோயம்புத்தூர் மாநகராட்சி

## ஏலம் கோருதல்

ந.க.எண். 4741/2023/கே8

ஏலம் விலைப்புள்ளி படிவம் சமர்ப்பிக்கப்படும் நாள் - 25.11.2025

கலந்து கொள்பவர் பெயர் -

முகவரி -

டேவணித் தொகை செலுத்தப்பட்ட விபரம் - ரூ. வரைவோலை எண். நாள். .2025 வங்கியின் பெயர்

| வ. எண். | அளவு | ஏலப் பொருட்களின் விபரம் | அலகு | விலைப் புள்ளி ரூ | விலைப்புள்ளி எழுத்து வடிவில் ரூ | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 769.23 | பித்தளை | கிலோ | | | |
| 2 | 1494.57 | துருப்பிடிக்காத எஃகு | கிலோ | | | |
| 3 | 3005.54 | அலுமினியம் | கிலோ | | | |
| 4 | 1054.99 | இரும்பு | கிலோ | | | |

கையொப்பம்

குறிப்பு ஏலத்தில் கலந்து கொள்பவர் விலைப்புள்ளி படிவத்தில் அடித்தல் மற்றும் திருத்தம் இல்லாமல் தெளிவாக எழுத வேண்டும்